# கூத்த நூல் அமைப்பும் வரலாறும்

**முனைவர் ரா.பிரியதர்ஷினி**
**முனைவர் பட்ட மேலாய்வாளர்**
**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
**(தன்னாட்சி நிறுவனம்)**
**இந்தியக் கல்வி அமைச்சகம்**
**பெரும்பாக்கம்**
**சென்னை**
**dr.r.priyadharsinidancer@gmail.com**

தமிழ் இலக்கியங்களில் நடனத்திற்கு என உருவான நூல்கள் பல. கடல்கோள்களினாலும், பிற பண்பாட்டு படையெடுப்பினாலும் அழிந்தவை போக எஞ்சியுள்ள நூல்கள் சிலவே. அவ்வாறு எஞ்சிய நூல்களுள் ஒன்று கூத்த நூல் ஆகும். கூத்த நூல் ஒன்பது நூல்களாக எழுதப்பட்டது என்று கூறப்படுகிறது. ஆனால் இன்று கிடைத்திருப்பதோ இரண்டு நூல்களே. கிடைத்த நூல்கள் இரண்டும் நடனம் பற்றி கூறுகின்ற நூல்களாகும்.

கூத்த நூலைப் பற்றி அடியார்க்குநல்லார் தமது சிலப்பதிகார உரையுள் குறிப்பிடுகின்றார். அடியார்க்கு நல்லார் தமது உரையுள் தம் காலத்தினுக்கு முன்பிருந்த நூல்களைப் பட்டியலிட்டு அவ்வனைத்து நூல்களும் இன்று வழக்கொழிந்து போயின என்கின்றார். அவரால் சுட்டப்படும் நூல்கள், பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், தமிழ் நாடக நூலாகிய பரதம், அகத்தியம், குணநூல், செயிற்றியம், இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு மற்றும் கூத்த நூல் என்பனவாகும்.

அடியார்க்குநல்லார் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. அவர் காலத்து கிடைக்கப் பெறாத நூலாகிய கூத்த நூல் இன்று கிடைத்திருப்பது (இரண்டு நூல்கள்) தமிழ் செய்த தவப்பயனே ஆகும். கூத்த நூல் தமிழ் நாட்டிய மரபுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கும் மிக மிகப் பழைய நூலாகும்.

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

**கூத்த நூல் ஆசிரியர்**

கூத்த நூலை எழுதியவர் சாத்தனார் என்பவர் ஆவர். இவரது ஊர் கூத்தனூர் ஆகும். முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்த அகத்தியனாரிடம் இவர் பாடம் கேட்டவர்; தொல்காப்பியருடன் உடன் பயின்றவர் எனும் கருத்து வழக்கில் உள்ளது. ஆயின், சான்றாதாரங்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. கூத்த நூலின் ஆசிரியர் கூத்தனூர்ச் சாத்தனாரே தமது நூலுள் இந்நூல் தோன்றிய வரலாற்றை நூலின் தோற்றுவாயில் குறிப்பிடுகின்றார்.

இதனை,

"மந்திரமாமலை யந்திர தவிசில்
வடக்குப் பரிதி கிடக்கப் போம்வழி
நால்வர்க்குத் தந்திர நான்மறை கூறும்
கூத்தனும் கூத்தியும் இயற்றிய கூத்தைக்
கண்டான் அகத்தியன் கண்ணுதல் செப்ப
இயற்றினன் கூத்தின் இலக்கண வைப்பே '

எனும் பாடல் மூலம் விளக்கியுள்ளார். இப்பாடலில், 'மாலைக் காலத்தில் சிவனும் உமையவளும் நடனமாட, அதனைக் கண்ட அகத்தியன் சிவன் விரும்ப கூத்தின் இலக்கணத்தை இயற்றினான்' என்று நடனத்தினுக்கு முதல் நூல் தோன்றிய வரலாற்றைக் கூறி, பின் எவ்வாறு வழி நூல்களும் சார்பு நூல்களும் தோன்றின என்பதை,

'அகத்தியன் இயற்றிய அகத்தியம் முதல்நூல்
சிகிண்டி இயற்றிய தேன்இசை சார்பு
பேரிசை நாரை குருகு கூத்து

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

சயந்தம் குணநூல் முறுவல் செயிற்றியம்

தண்டுவம் நந்தியம் பண்ணிசை தக்கம்

தாளம் தண்ணுமை ஆடல் மூவோத்தும்

வழிநூல் அவற்றின் வழிவகை வகுத்துக்

கூத்தின் விளக்கம் கூறுவன் யானே'

என்று நடனத்தின் முதல் நூல் அகத்தியம் சார்புநூல் தேன்இசை வழிநூல்கள் பல. அவ்வாறு தோன்றிய வழிநூல்களுள் தன்னுடைய கூத்து நூலும் ஒன்றாகும் என்கின்றார்.

சாத்தனார் எது குறித்து இந்நூலை எழுதினார் என்பதை.

'தென்னவன் வேண்ட முன்னைநூல் ஆய்ந்து

செந்தமிழ் நிலத்தும் சேர்பல நிலத்தும்

வந்த மெய்க்கூத்தின் வகைஎலாம் கண்டு

கூத்தநூல் நான்முகக் கூத்தன் சாத்தன்

வேத்தவை எல்லாம் வியப்பத் தந்ததே'

என்று விளக்கியுள்ளார். இப்பாடலில் கவனிக்கத்தக்கன மூன்று செய்திகள். அவை,

'தென்னவன் வேண்ட' என்கின்றார். தென்னவன் எனும் சிறப்பு பாண்டிய மன்னர்களுக்கே உரிய ஒன்று. சாத்தனாரை எந்தப் பாண்டிய மன்னன் வேண்டினான்? அவன் இயற்பெயரோ அரசு முறைப்பெயரோ இந்நூலில் எங்கும் குறிப்பிடப் படவில்லை.

'முன்னை நூல் ஆய்ந்து' என்கின்றார். அவரால் குறிக்கப்பட்ட நூல்களில் பஞ்சமரபு இல்லை. எனவே, இந்நூல் பஞ்சமரபின் காலத்திற்கு முந்தைய காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். பஞ்சமரபின் காலம் பாண்டியன் முடத்திருமாறன் காலம் என்று சொல்லப்படுகின்றது. முடத்திருமாறனோ

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

கடைச் சங்கம் வைத்துத் தமிழ் ஆய்ந்தவன். எனவே இக் கூத்த நூல் கடைச் சங்கத்தினுக்கும் முந்திய நூலாக இருக்க வேண்டும்.

'செந்தமிழ் நிலத்தும் சேர்பல நிலத்தும்' என்கின்றார். செந்தமிழ் நிலமாகிய வடவேங்கடம் தென்குமரி இவைகளுக்கு இடையே கிடந்த தமிழ் உலகின் நாட்டியம் மட்டுமன்றி தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருநத பிற நில எல்லைகளில் பயிலப்பட்ட கூத்துக்களை எல்லாம் கண்டதன் பின் இந்நூலை எழுதியதாகக் கூறுகின்றார்.

சாத்தனார் காலத்தில் தமிழகத்தோடு தொடர்புடைய நாடுகள் யாவை? எனும் செய்தி கூத்த நூலில் எங்கும் காணப்படவில்லை. ஒருவேளை கிடைக்கப் பெறாத ஏழு நூல்களில் இச்செய்தி சொல்லப்பட்டிருந்தால் அந்நூல்களுள் பிறநாட்டு நடன வகைகளும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருந்திருக்கும். எது எவ்வாறு ஆயினும் கூத்த நூல் காலத்தால் மிகப் பழைமையானது, தனித் தமிழிலேயே அனைத்துச் செய்திகளும் சூத்திர யாப்பில் சிறந்த ஓசை நயத்துடன் அமைந்துள்ளது இந்நூலின் சிறப்பாகும்.

**கூத்து நூலின் பாகுபாடு**

கூத்து நூல் ஒன்பது நூல் என முன்பே குறிப்பிடப்பட்டது. ஒன்பது நூல்களுள் கிடைத்துள்ள நூல்கள் இரண்டே. அவை சுவை நூல், தொகை நூல் என்பன.

சுவை நூல்: இந்நூல் 153 நூற்பாக்களை உடையது. 153 நூற்பாக்களைப் பன்னிரண்டு இயலாகப் பகுத்துள்ளார். இயல்களுக்கென தனித்தனி தலைப்பைக் கொடுத்துள்ளார். இயல்களில் சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் காணலாம்.

இறைவனது கூத்தில் இருந்து ஒலியும், எழுத்தும், இசையும் தோன்றின.

ஓம் எனும் ஒலியே எவற்றுக்கும் தொடக்கம். எவற்றுக்கும் முடிவு.

© Insieme Arti

This work is licensed under CC BY-NC-SA 4.0

ஓம் எனும் ஒலி மட்டுமன்றி மறைகளிடம் வைக்கப்பட்ட மறைமொழிகளும் தமிழ் நெடுங்கணக்கும் (அகரம் முதல் னகரம் வரை) இறைவனது கூத்தில் உடுக்கையில் இருந்து உதித்தன.

பொது நெறி எனும் பகுதியில் சுவை நூலை உலகியல் நோக்கில் பகுத்தும் விரித்தும் சொல்லப் போகும் செய்தியின், அதன் பொதுத்தன்மையின் மேலிட்டுக் காட்டியுள்ளமை.

அகம் (மனம்) சுவை, இழை இவைகளின் பொது நெறியை விளக்கிப்பின் சுவைகளின் பிறப்பு, வளர்ச்சி, நெறி, வகை, தொழில் விளைவு இவைகளைத் தொகைப்படுத்திக் காட்டியமை.

இயல்பான வாழ்வில் பொதுவாகத் தோன்றும் உணர்ச்சிகளை கலை இன்பம் ஆக்குவதால் கற்பனை பெரும் வேத்தியல்பை வரையறைப் படுத்தியமை.

பொது இயல் வேத்தியல் இவைகளை அகம், சுவை, இழை என்னும் குணம் பாவம் ரசனை இவைகளைத் தொடர்பு படுத்திக் காட்டியமை.

பொது இயலாக உலக வழக்கின் இயல்பான ஒன்பது குண பாவிகங்களை வேத்தியலாம் நாடக வழக்கினுடன் இணைத்து ரசங்களாக்கி (சுவைகள்) குணங்களாயும், சுவைகளாயும் பரிணாமம் பெறுவதை விளக்குதல்.

ஒன்பான் சுவைகள் 48 இழைகள். இவை நடனத்தில் எவ்வாறு படிப்படியாக ஓங்குதலும் ஒடுங்குதலும் என்பதை உள்ளத்தினால் எவ்வாறு ஆளுதல் என்பதை விளக்கியமை.

நடனத்தில் ஒவ்வொரு காட்சிப் பகுதியும் கதை இன்பமாகவோ, சுவை இன்பமாகவோ, இடம் பொருள் ஏவலைக் குறித்து எவ்வெவ்வகையில் இயங்கலாகும் என்பதை விளக்கியமை.

© Insieme Arti

This work is licensed under CC BY-NC-SA 4.0

சுவை நூலுக்கான சுவை இயன்ற கூத்துகளின் புணர்ப்பு வகையை கூறியமை

என சுவை நூல் செய்திகள் உள்ளன.

## தொகை நூல்

இந்நூல் 162 நூற்பாக்களை உடையது.

சுவை நூலில் சுவைகளைத் தொகுத்தும் வகுத்தும் காட்டியதன்பின் சுவைகளின் அடியாகப் பிறந்த கூத்துக்களைத் தொகுத்தும் வகுத்தும் காட்டுதல்.

இயல் பொதுத்தன்மை வளர்ந்து வரல் முறை. இறைவனது 108 கூத்து முறை, இவ் 108 கூத்துகளில் இன்றியமையா 12 கூத்துகளை விளக்கிக் காட்டுதல் இப் பன்னிரண்டு கூத்துகளே மக்களிடம் பரவிய நிலை இவைகளைத் தொகுத்துக் காட்டல்.

சாய்ப்பு நெறியான கரணங்களை விளக்கிக் காட்டல்.

கரணங்களையும் தாண்டவங்களையும் இணைத்துப் படிமங்களாகக் காட்டல்.

12 வகையான கூத்தியல்புகளை தனித்தனியாக விளக்கிக் காட்டல்.

தண்டுவம் (தாண்டவம்) தக்கம் (லாஸ்யம்) இவைகளை விளக்கிக் காட்டல்.

தாண்டவம், லாஸ்யம் எனும் இருவகை நடனங்களும் இணைந்து செயல்படுவதை விளக்குதல்

என தொகை நூல் செய்திகள் உள்ளன.

## நிறைவுரை

மானுட உள்ளத்துத் தோன்றும் உணர்வுகளே உண்மை. உணர்வினால் தோன்றுவது சுவை. சுவைகள் நிரம்பி மெய்வழியே வெளிக்காட்டுதல்

© Insieme Arti This work is licensed under CC BY-NC-SA 4.0

மெய்ப்பாடு என்கின்றார். இக்கருத்து தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுடன் பொருந்தி வருகின்றது. கூத்தினது விளக்கமென இவ்வாசிரியர் கூறியிருப்பது எல்லாக் காலத்தும் பொருந்தி வரும் இலக்கணம் ஆகும். அஃதாவது, 'அகம்உயிர் ஆகச் சுவைஉளம் ஆக இழை உடல்ஆக இயல்வது கூத்து' என்பது மிகச் சிறந்த விளக்கமாகும். அகத்தின் உணர்வை புறத்தார் காண நிகழ்த்தினால் அது ஆளத்தி என்றும், புறத்து நிகழ்வுகளை மனத்தகம் குவியச் செய்தால் அது நாளத்தி ஆகும் எனும் புதிய சிந்தனையைப் புதிய சொல்லாக்கத்துடன் தந்துள்ளார் ஆசிரியர் சாத்தனார். தொல்காப்பியம், பரத சாத்திரம் என்பன சுவை எட்டு என்று கூறியிருக்க, கூத்த நூல் ஒன்பது என்கின்றது. இழைகள் 48 என்று கூறியிருப்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுடன் பொருந்தியே அமைந்துள்ளது. வேத்தியல் பொதுவியல் என்பதற்கு கூத்த நூல் ஆசிரியர் கூறும் விளக்கம் புதுமையும் சிறப்பும் கொண்டிருக்கின்றனபொது இயல் என்பது தொழில் செய்து தொழிலின் பயன் பெற வேண்டி உணர்ச்சிகளைச் சுவைப்பது என்றும், வேத்தியல் என்பது சுவையைச் சுவைப்பதையே பயனாகக் கொண்டு சுவை கொள்ளல் வேத்தியல் என்றும் விளக்கிப் பின்னும், பொதுவியல் என்பது இயல்பாகக் கண்ணால் காணுவதும், நடைமுறையில் அன்றாடம் நடைபெறுவதும், இருப்பதை இருப்பதாகக் காட்டுவதும் ஆம், என்றும், வேத்தியல் என்பது கண்காணா காட்சியைப் படைப்பது என்றும், நடைமுறை போன்று நடித்துக் கற்பனையாய்க் காட்டுவது என்றும் மிகைப்படுத்தியும் கற்பனைக் கனவினை உடன் இணைத்துக் கனவுபோல் காட்டுவது வேத்தியல் ஆம் என்கின்றார்.

மூன்று குணங்களின் அடிப்படையில்தான் சுவைகள் தோன்றும் என்று கூறியிருப்பது சுவைகளைப் பற்றிய அரிய ஆய்வாக அமைந்துள்ளது. ஒன்பது சுவைகளுடன் நேரடியாக இணைந்து வரும் இழைகளை விளக்கியுள்ளமையைக் காணுமிடத்து இந்நூல் ஆசிரியர் உளவியல் வல்லுநர் எனத் தெரிகின்றது. சாய்ப்பு எனும் பகுதியில் செய்யுளின் அசைகளைப்

© Insieme Arti
This work is licensed under CC BY-NC-SA 4.0

போன்று, நேர்நிரை என்னும் வாய்ப்பாட்டினைக் கொண்டு கரணங்களைக் கூறியிருப்பது கரணங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுதற்குத் துணை செய்கின்றது. 12 கூத்துக்களை விவரித்து அனைத்துக் கூத்துகளும் செயல்படும் முறைகளை விவரித்தது மிகச் சிறந்த ஒன்றாகும்.

**பார்வை நூல்கள்:**


1. History of Tamizh Dance by Dr. S. Raghuraman, Nandini Pathippagam, Chennai,2007.
2. Koothanool by Thiru S. Yogiyar, Tamilnadu Sangita Nataka Sangam of Chennai, 1968.
3. http://www.tamilvu.org/- Online Tamil Virtual University.
4. http://www.tamilvu.org/library/libindex.htm - Online library at Tamil Virtual University.



© Insieme Arti

This work is licensed under CC BY-NC-SA 4.0